


கூரங்கோட்டை ஊராட்சி
இராமநாதபுரம் மாவட்டம்
இராமநாதபுரம் ஒன்றியம்

தீர்வே எண் - 237/2 இல் 5300ச.மீ
அளவு கொண்ட 28 மனைப்பிரிவுகளுக்கு
அனுமதி அளிக்கப்படுகிறது.

தலைவர்
கூரங்கோட்டை ஊராட்சி.
இராமநாதபுரம் ஒன்றியம்.

Signature valid
Signed by: Assistant Director
Location:Ramanathapuram
Date:2023.11.03 18:08:17

நகர் ஊரமைப்பு துறை - இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், கூரங்கோட்டை ஊராட்சி, கூரங்கோட்டை கிராமம், நில அளவை எண்:237/2B.-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள பதிவு எண்: CJKYM7ZD
அளவு: 1 : 400

வ

குறிப்பு:-

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு - 5300.00ச.மீ (1.30ஏக்கர்)
உத்தேச சாலையின் பரப்பளவு - 1619.04ச.மீ
மீதமுள்ள பரப்பளவு - 3680.96ச.மீ

கோரிய மனைகள் - 28
ஒதுக்கிய மனைகள் - 28

மனைப்பிரிவு இடத்தின் எல்கை
நிலையில் உள்ள சாலை

ஒதுக்கீடுகள் :-

(TANGEDCO -க்கு தான பத்திரம் ஆவண எண்:2726/2023, நாள் 26.10.2023 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டது)

TANGEDCO ஒதுக்கீடு (A) - 19.50ச.மீ (0.52%)

(உள்ளாட்சிக்கு தான பத்திரம் ஆவண எண்:2728/2023, நாள் 26.10.2023 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டது)

உள்ளாட்சி ஒதுக்கீடு (B) - 19.50ச.மீ (0.52%)

உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு - 1619.04ச.மீ

மூலை முடக்கு:

7.20மீ, 9.0மீ, 10.0மீ மற்றும் 12.0மீ அகல சாலைக்கு 1.50மீ x 1.50மீ

நிபந்தனைகள்:

1.அரசாணை நிலை எண் : 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்:16.08.2003-ன் படி நில உரிமம் குறித்து தலைவர் கூரக்கோட்டை ஊராட்சி உறுதி செய்துகொள்ள வேண்டும்.

2. அரசாணை நிலை எண் : 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:09.12.2020 மற்றும் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்:16.07.2022 -ன் படி தலைவர் கூரக்கோட்டை ஊராட்சி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் சாலைகள் மற்றும் பொது உபயோகம் நிலபரப்பினை கூரக்கோட்டை ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதனை உள்ளாட்சி பெயருக்கு உட்பிரிவு செய்து அரசாணையின்படி தொடர் நடவடிக்கைகள் மேற்க்கொண்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும்முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், மற்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் தலைவர் கூரக்கோட்டை ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. நில உரிமம் குறித்து சமர்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்

6. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களான கிரையப்பத்திரம், குத்தகைப்பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிப்பார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்றும் சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7.மனுதாரர் மனையிடத்தின் வடக்கு எல்லையில் புல எண் 237/1-ல் கால்வாய் அமைந்துள்ளதால், மனையிடத்தின் எல்லையிலிருந்து 3.00மீ அகலத்திற்கு கட்டிடங்கள் ஏதும் கட்டப்படக்கூடாது.

SWP/DTCP/RAMANATHAPURAM LAYOUT NO : 37/2023

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
இராமநாதபுரம்